ANNEX II

முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை : 04/2016

எனது இலக்கம் : டீஎம்எஸ்/சம்பளம்/பொது

முகாமைத்துவச் சேவைத் திணைக்களம்

பொதுத் திறைசேரி,

கொழும்பு 01.

2016.08.18

செயலாளர்

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதவியினரினதும் பல்கலைக்கழகக் கல்வி மற்றும் கல்வி சாராத பதவியினர்களினதும் சம்பளத்தைத் திருத்துதல் - 2016**

2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்கியதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பதவியினரினதும் பல்கலைக்கழக கல்வி மற்றும் கல்வி சாராத பதவியினர்களினதும் தற்போது நடைமுறையிலுள்ள சம்பள அளவுத்திட்டத்திற்குப் பதிலாக இந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சம்பளத் திட்டங்கள் 2016.01.01 ஆம் திகதி முதல் 05 படிநிலைகளினால் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**02. புதிய சம்பளக் கட்டமைப்பினுள் பின்வரும் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

I. 2011.01.10 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 43, 2011.12.12 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 46 மற்றும் 2012.12.10 ஆத் திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 48 ஆகியவற்றின் பிரகாரம் வழங்கப்படுகின்ற விசேட கொடுப்பனவு.

II. 2014.11.12 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 24/2014, 2014.12.31 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 24/2014 (I) மற்றும் 2015.02.11 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 05/2015 ஆகியவற்றின் பிரகாரம் மாதாந்தம் வழங்கப்படுகின்ற ரூபா 10000/= ஆகிய இடைக்கால கொடுப்பனவு

**03. சம்பள மாற்றம்**

03.1 தற்போது காணப்படுகின்ற சம்பள அளவுத்திட்டங்களிலிருந்து புதிய சம்பளத்திட்டங்களுக்கு சம்பளத்தை மாற்றுவது படிமுறை படிமுறையாக வைக்கும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும் இந்த சம்பளத் திருத்தம் 05 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றபடியினால்

அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்ற அட்டவணையின் பிரகாரம் சம்பளத்தை மாற்றுதல் வேண்டும்.

03.2 சம்பள மாற்றத்தை தயாரிப்பதனை இலகுபடுத்துவதற்காக அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள் சகல சம்பள அளவுத்திட்டத்திற்குக் கிட்டிய உயர் தரத்திற்கு பதவியுயர்வு பெறாதிருப்பின் பெறுகின்ற சம்பள வகுதிகளும் உள்ளடங்கும் விதத்தில் ஒவ்வொரு தரத்திற்காகவும் வெவ்வேறாக சம்பள மாற்றக் கூண்டு அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளது.

03.3 சம்பளத்தை மாற்றும் போது 2015.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட சமபளக் கட்டமைப்பின் கீழ் தொடர்புடைய சம்பள வகுதிகளையும் தரங்களையும் அடையாளங் காணுதல் வேண்டும். அதன் பிரகாரம் இந்த சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள இசைவான சம்பள வகுதி மற்றும் தரங்கள் ஆகியவற்றை அடையாளங்கண்டு அதற்குரிய அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள மாற்றக் கூண்டைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

03.4 உரிய சம்பள மாற்றக் கூண்டின் பிரகாரம், 2015.12.31 ஆம் திகதிக்கு உரிய சம்பள படிநிலைக்கு இணங்கியதாக 2016.01.01 ஆம் திகதிக்குரிய சம்பளப் படிநிலையின் பிரகாரம் தொடர்புடைய சம்பள அளவுத்திட்டத்தில் வைத்தல் வேண்டும். இதற்காக இந்த அட்டவணையின் இணைப்பு I ஆகக் காட்டப்பட்டுள்ள சம்பள மாற்ற மாதிரியைப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

03.5 மேலே 03.4 இல் பின்பற்றிய முறைக்கு அமைவாகவே 2017.01.01, 2018.01.01. 2019.01.01 மற்றும் 2020.01.01 ஆகிய திகதிகளில் அடுத்துவரும் சம்பள மாற்றங்களும் அந்தந்த சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இதற்காக அட்டவணை II இல் ஒவ்வொரு வருடத்தின் கீழும் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்களை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இந்த சம்பள மாற்றத்திற்காக ஒவ்வொரு வருடத்தின் பொருட்டும் இணைப்பு II, III, IV மற்றும் V ஆகக் காட்டப்பட்டுள்ள சம்பள மாற்ற மாதிரியைப் பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

**04. சம்பள ஏற்றத்தைக் கணக்கிடுதல்.**

04.1 சம்பள அளவுத்திட்டத்தினுள் சம்பள ஏற்றத்தினைக் கணக்கிடுதல்.

I. 2016.01.01 ஆம் திகதி முதல் 2016.12.31 ஆம் திகதி வரையான காலத்தினுள் சம்பள ஏற்றத்தை சம்பாதிக்கின்ற சந்தர்ப்பத்தில் மேலே 03.4 இல் வைக்கப்பட்ட சம்பள வகுதிக்கு கிட்டிய உயர் சம்பள வகுதியில் வைத்தல் வேண்டும். அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுக்குரிய சம்பள ஏற்றத்தின் பெறுமதியாகக் கவனத்திற்கொள்ள வேண்டியது தொடர்புடைய சம்பள வகுதிகள் இரண்டிற்கும் இடையிலான வேறுபாடாகும்.

உதாரணம்:- 2015.12.31 ஆம் திகதிக்கு U-PL I சம்பள அளவுத்திட்டத்தின் I ஆம் தரத்தில் ரூபா.18090/= சம்பள வகுதியைப் பெறக்கூடிய ஒருவருக்காக 2016.01.01 ஆம் திகதிக்கு ரூபா.21397/= சம்பள வகுதி ஏற்புடையதாகும். அன்றைய தினத்திற்குரிய சீராக்கற் கொடுப்பனவு ரூபா.10311/= ஆகும். சம்பள ஏற்றத் திகதி 2016.10.01 எனில் அத்துடன் அன்றைய தினத்திற்கு சம்பள

ஏற்றத்தை சம்பாதித்திருப்பின் சம்பள ஏற்றத்துடன் அவருக்கு உரித்தாகின்ற சம்பள அளவுத்திட்டம் ரூபா.21581/= ஆகும். சீராக்கற் கொடுப்பனவு ரூபா.10313/= ஆகும். அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுக்கான சம்பள ஏற்றமாக ரூபா.184 உரித்தாகும்.

04.2 சம்பள அளவுத்திட்டத்தில் உயர்ந்தபட்ச எல்லைக்கு அப்பால் சம்பள ஏற்றத்தை வழங்குதல்.

I. சம்பள அளவுத்திட்டமொன்றில் அதிகபட்ச எல்லைக்கு வந்துள்ள பதவியினருக்கு சம்பள ஏற்றம் வழங்குவது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 2007.07.24 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை 35 இன் பிரகாரம் அதிகபட்ச எல்லைக்கு அப்பால் சம்பள ஏற்றத்தை வழங்கி இருக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் 2016.01.01 ஆம் திகதி முதல் ஏற்புடையதாக வேண்டிய சம்பள வகுதியைத் தீர்மானிப்பதற்காக அட்டவணை II இல் தொடர்புடைய சம்பள மாற்றக் கூண்டிலுள்ள உரிய நிரலில் சம்பள அளவின் இறுதியிலுள்ள சம்பள வகுதி இரண்டுக்குமிடையிலுள்ள வேறுபாட்டை சம்பள ஏற்றமாகக் கருதி சம்பளப் படிநிலைகளைக் கணக்கிடுதல் வேண்டும்.

II. 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் சம்பள அளவுத்திட்டத்தின் அதிகபட்ச எல்லையைத் தாண்டி சம்பள ஏற்றத்தை சம்பாதிக்கின்ற சந்தர்ப்பத்திலும் மேலே (I) இல் உள்ள விதமாக தொடர்புடைய சம்பளப் படிநிலைகளைக் கணக்கிடுதல் வேண்டும்.

**05. மொத்த சம்பளத்தின் சீராக்கற் கொடுப்பனவு**

05.1 அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக மேலே 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுடன் 2015.12.31 ஆம் திகதிக்கு பெற்றுள்ள மொத்தச் சம்பளம் மற்றும் இந்த சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய அடிப்படை சம்பளங்களுக்கு இடையிலான வேறுபாடு மொத்தச் சம்பளத்தின் சீராக்கற் கொடுப்பனவாக கணக்கிட்டு அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக அதற்கு இணையாக சீராக்கற் கொடுப்பனவும் வழங்குதல் வேண்டும். இந்த சீராக்கற் கொடுப்பனவு இதில் கீழே உள்ள 15.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தவிர ஏனைய எந்தவொரு பணிக்காகவும் சம்பளத்தின் பகுதியொன்றாக கவனத்திற்கொள்ளலாகாது.

05.2 மேலே 04.2 இல் உள்ள விதமாக அதிகபட்ச எல்லைக்கு அப்பால் சம்பளப் படிநிலை கணக்கிடப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்தப் படிநிலைக்குரிய மொத்த சம்பளத்தின் சீராக்கற் கொடுப்பனவையும் வங்குதல் வேண்டும். அதற்காக முதலில் 2015.12.31 ஆம் திகதிக்கு பெற்றுள்ள சம்பள வகுதி மற்றும் மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் கீழ் உரித்தான கொடுப்பனவுகளை மாத்திரம் உள்ளடக்கிய மொத்த சம்பளத்தை கணக்கிடுதல் வேண்டும். அந்த சம்பளம் மற்றும் மேலே 04.2 இன் கீழ் கணக்கிடப்பட்ட சம்பள வகுதிக்கு இடையிலான நிதி ரீதியான பிரதிகூலமொன்று இருப்பின் அந்தப் பெறுமதி மொத்தச் சம்பளத்தின் சீராக்கற் கொடுப்பனவாக உரிய சம்பள வகுதியுடன் செலத்துதல் வேண்டும்.

உதாரணம்: 2015.12.31 ஆம் திகதி U-PL 1 சம்பள அளவுத்திட்டத்தின் தரம் II இன் அதிகபட்ச எல்லையைத் தாண்டி இரண்டு (02) சம்பள ஏற்றங்களைப் பெற்று ரூபா.17830/= சம்பள வகுதியில் இருந்த ஒரு நபருக்கு 2016.01.01 ஆம் திகதிக்கு உரித்தாகின்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் சீராக்கற் கொடுப்பனவைக் கணக்கிடுதல்.

- 2016.01.01 ஆம் திகதிக்கு இணையான அடிப்படைச் சம்பளம் ரூபா.21087/= ஆகும்.

  2016 ஆம் ஆண்டுக்குரிய U-PL 1 இல் II ஆம் தரத்திலுள்ள சம்பள ஏற்றப் பெறுமதி ரூபா. 166/= ஆகும். இது கிட்டிய இரண்டு சம்பள ஏற்றங்களுக்கு இடையிலான வேறுபாடாகும். (20755–20589=166) அதன் பிரகாரம் (166X2) ரூபா. 332/= ஐ ரூபா. 200755/= இற்கு சேர்ப்பதன் மூலம் ரூபா. 21087/= பெறப்பட்டுள்ளது.

- 2016.01.01 ஆம் திகதிக்கு சீராக்கற் கொடுப்பனவு ரூபா.10309/= ஆகும்.
  ரூபா. 17830/= சம்பள வகுதிக்குரிய கொடுப்பனவுகள்
  15% + 15% + ரூபா. 10000 = ரூபா. 13556/-
  ரூபா. 17830 + ரூபா. 13566 = ரூபா. 31396
  சீராக்கற் கொடுப்பனவு
  ரூபா. 31396 - ரூபா. 21087= ரூபா.10309/-

- அதன் பிரகாரம் 2016.01.01 ஆம் திகதிக்கு செலுத்தவேண்டிய அடிப்படைச் சம்பளம் = 21087/=
  மொத்த சம்பளத்தின் சீராக்கற் கொடுப்பனவு = ரூபா.10309/-

**06. பதவியுயர்வொன்றின் போது சம்பளத்தை மாற்றுதல்.**

06.1 இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் படிநிலை முறையின் கீழ் சம்பள அளவுத்திட்டத்தை மேற்கொள்ளப்படுகின்ற காலஎல்லையினுள் (2016.01.01 இலிருந்து 2020.01.01 வரை) பதவியுயர்வு பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அந்தப் பதவியுயர்வுகளுக்கு உரிய சம்பள மாற்றங்களில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அந்தப் பதவியுயர்வு செயல்வலுப்பெறுகின்ற வருடத்திற்குரிய நிரலில் காட்டப்படுகின்ற சம்பள வகுதியாகும்.

உதாரணம்: 2016.01.01 முதல் U-PL 1 சம்பள அளவுத்திட்டத்தின் இரண்டாம் தரத்தின் கீழ் ரூபா.19759/= சம்பளம் மற்றும் ரூபா.10293/- ரூபாவுக்கான சீராக்கற் கொடுப்பனவொன்றை பெற்றிருக்கின்ற 2016.03.01 ஆம் திகதி U-MN 1 சம்பள அளவுத்திட்டத்தின் III ஆம் தரத்திலுள்ள பதவியொன்றுக்கு பதவியுயர்வொன்றைப் பெறுவாராயின் அந்த உத்தியோகத்தர் U-PL 1 சம்பள அளவுத்திட்டத்தின் ரூபா.20105/- சம்பள வகுதியில் வைத்து ரூபா. 10295/- சீராக்கற் கொடுப்பனவொன்றை வழங்குதல் வேண்டும்.

07. ஏனைய கொடுப்பனவுகள்

07.1 இந்த சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள உள்ளடக்கி புதிய சம்பளக் கட்டடைமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளபடியினால் 2016.01.01 ஆம் திகதி முதல் அந்தக் கொடுப்பனவு வழங்குவதை நிறுத்துதல் வேண்டும்.

07.2 இலக்கம் 01/2014 மற்றும் 2014.01.06 எனும் தேதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு அமைவாக வழங்கப்படுகின்ற மாத்திற்கு 7800/= ரூபாவாகிய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குதல் வேண்டும்.

08. பணிக்கொடையைக் கணக்கிடுதல்

08.1 இந்த சுற்றறிக்கையின் சம்பளக் கட்டடைமைப்பின் அடிப்படையில் 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் பணிக்கொடையைக் கணக்கிடும் போது ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டியது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக இறுதியாகப் பெற்ற சம்பளப் படிநிலையேயாகும்.

09. சம்பளத்தின் சதவீதமாகவோ அல்லது/ அத்துடன் சம்பளத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு

09.1 சம்பளத்தின் சதவீதமாகவோ அல்லது/ அத்துடன் சம்பளத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பனவுகளும் 2015.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட நிதிப் பெறுமதிக்கு வரையறுத்தல் வேண்டும். 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் ஏதேனும் பதவியொன்றுக்கு நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு இந்தக் கொடுப்பனவை வரையறுக்க வேண்டியதும் 2015.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட சம்பளத்தை எடுகோளாக ஏற்புடையதாக்கி கணக்கிடப்பட்ட நிதிப் பெறுமதிக்கேயாகும்.

10. நியமனக் கடிதங்களில் சம்பள அளவுத் திட்டத்தைக் குறிப்பிடுதல்

10.1 இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளக் கட்டடைமைப்பு முழுமையாக செயல்வலுப் பெறுகின்ற 2020.01.01 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்பின் போது/ பதவியயர்வுகளின் போது வழங்குகின்ற நியமனக் கடிதங்களில் சம்பள அளவுத் திட்டத்தைக் குறிப்பிடும் போது அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சம்பள அளவுத் திட்டத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இருப்பினும் கொடுப்பனவுகளை வழங்க வேண்டியது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக இருக்க வேண்டியபடியினால், அது பற்றியும் அந்த நியமனக் கடிதங்களில் குறிப்பிடுதல் வேண்டும்.

11. நாளாந்த வேதனம்

11.1 அமய/ நாளாந்த சம்பளம் பெறுநர் அடிப்படையில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற நாளாந்த வேதனமும் 2016.01.01 ஆம் திகதியிலிருந்து இந்த சுற்றறிக்கை முழுமையாக செயல்வலுப் பெறுகின்ற 2020.01.01 ஆம் திகதி வரையில் வருடாந்தம் திருத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் அட்டவணை II இல் ஒவ்வொரு வருடத்திற்கும் உரியதாகக் காட்டப்பட்டுள்ள அந்தந்தச் சேவை வகுதியின் ஆரம்பத் தரத்தில் ஆரம்ப

மாதாந்தச் சம்பளத்தை 30 ஆல் பிரித்து நாளாந்த வேதனத்தைக் கணக்கிடுதல் வேண்டும். அதற்கு மேலதிகமாக அந்த சம்பளப் படிநிலைகளுக்கு உரிய சீராக்கக் கொடுப்பனவுகளையும் 30 ஆல் பிரித்து நாளாந்தக் கொடுப்பனவாக செலுத்துதல் வேண்டும்.

12. **மேலதிக நேரக் கொடுப்பனவு**

12.1 இந்தச் சுற்றறிக்கை கட்டங்கட்டமாக செயல்வலுப் பெறுகின்ற கால எல்லைக்குள் அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெறுகின்ற சம்பளப் படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை கணக்கிடுதல் வேண்டும்.

13. **வினைத்திறன்காண் தடை**

13.1 வினைத்திறன்காண் தடையைப் பூர்த்திசெய்ய வேண்டிய காலம் ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் பிரகாரம் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

14. **சம்பள ஏற்றத் திகதி**

14.1 இந்த சம்பளத் திருத்தத்தின் காரணமாக சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் ஏற்பட மாட்டாது.

15. கடன்/ முற்பணங்கள் வழங்கும் போது மாதாந்த கழித்தல்களின் கூட்டுத்தொகையின் எல்லை.

15.1 உத்தியோகத்தரொருவருக்கு கடன்/ முற்பணங்கள் வழங்கும் போது கவனத்திற்கொள்ளப்படுகின்ற 40% எல்லையைக் கணக்கிடும் போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அன்றைய தினத்திற்கு உரிய அடிப்படைச் சம்பளத்துடன் சீராக்கக் கொடுப்பனவையும் ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

16. **பொதுவான அறிவுரைகள்**

16.1 2016.01.01 ஆம் திகதியிலிருந்து புதிய சம்பளக் கட்டமைப்பை ஏற்புடையதாக்கிக் கொள்ள முன்னர், ஏதேனும் பதவியொன்றுக்கு தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை அல்லது முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அனுமதியில்லாமல் சம்பள அளவுத் திட்டங்களை ஏற்புடையதாக்கிக் கொண்டிருப்பின் இந்தச் சுற்றறிக்கையின் கீழ் சம்பளத் திருத்தங்களை மேற்கொள்ள முன்னர் ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய சரியான சம்பளத்திற்காக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

16.2 2006.01.01 ஆம் திகதிக்குப் பின்னர் வழங்கப்பட்டுள்ள நியமனங்களுக்காக ஏற்புடையதாக வேண்டியிருப்பது உரிய சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்பத் தரத்திலுள்ள ஆரம்பச் சம்பளப் படிநிலையாகும். அதற்குப் புறம்மாக சம்பளமொன்று வழங்கப்பட்டிருப்பின் இந்தச் சுற்றறிக்கையின் கீழ் சம்பளத்தைத் திருத்துவதற்கு முன்னர் அதனைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

16.3 இந்தச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரொருவருக்கு 2016.01.01 ஆம் திகதிக்கு உரித்தாக வேண்டிய சம்பளத்தைத் தீர்மானிக்கும் போது 2006.01.01 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்திற்குப் பின்னர்

மேற்கொள்ளப்பட்ட சம்பளத்தைத் திருத்தத்தின் பிரகாரம் சம்பளத்தைத் தயாரிப்பதற்கும் உத்தியோகத்தரக்குரிய சம்பள மாற்றம் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தொடர்புடைய அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

17. **இணைந்த கொடுப்பனவுகள்**

17.1 இந்த சம்பளக் கட்டமைப்பின் கீழ் ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய இணைந்த கொடுப்பனவுகள் தொடர்பான அறிவுரைகள் தனியாக வெளியிடப்படும்.

18. **கூடுதலாகச் செலுத்துதல்**

18.1 இந்த அறிவுரையை பிழையாக பொருள்கோடல் செய்வதன் காரணமாகவோ ஆவணங்களிலுள்ள தவறொன்றின் காரணமாகவோ கணக்கிடும் போது ஏற்படக்கூடிய தவறின் காரணமாகவோ ஏனைய தவறின் காரணமாகவோ யாரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கூடுதலான தொகையொன்று செலுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு கூடுதலாகச் செலத்தப்பட்டுள்ள தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு அந்த உத்தியோகத்தர் கடமைப்பட்டிருக்கின்றார்.

19. **தெளிவுகளைப் பெற்றுக் கொள்ளுதலும் மேலதிக அறிவுரையும்**

19. ஏதேனும் நிறுவனமொன்றினால் இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பற்றிய தெளிவுகளையும் மேலதிக அறிவுரைகளையும் எதிர்பார்ப்பதாயின், அவ்வாறான கோரிக்கைகளை பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம், பொதுத் திறைசேரி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

ஒப்பம்/ ஆர்.எச்.ஸ். சமரதுங்க

திறைசேரியின் செயலாளர் மற்றும்

நிதி அமைச்சின் செயலாளர்

பிரதி:-

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. கணக்காய்வாளர் அதிபதி
4. செயலாளர், தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு